Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆவணி 27 | (12 - 09 - 1992) | சனிக்கிழமை | ஓசை 207

## பௌதிகவியல் மீள்பரீட்சை இம்மாதம் நடைபெறும்

1992 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பௌதிகவியல் பகுதி - 2 இற்கான மீள்பரீட்சை இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப்பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே தென்னிலங்கையில் சில பகுதிகளில் வெளியாகிவிட்டதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. இதனை விசாரித்த புலனாய்வுத்துறையினர் சிலபகுதிகளில் இவ்வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகியிருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக தெரிவித்ததை அடுத்து மீள்பரீட்சை நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

# தீவிரமடையும் புலிகளின் தாக்குதல்கள்

# அரச ராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி

## வீரச்சாவு

### லெப். பூபால்

10-09-1992 அன்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி லெப்டினன்ட் பூபால் (வேலாயுதம் கிருஸ்ணகுமார் அல்வாய் வடக்கு, பருத்தித்துறை) வீரச்சாவு அடைந்தார்

★ ★ ★

### வீரவேங்கை சிலம்பரசன்

11-09-1992 அன்று அளவெட்டிப் பகுதியில்சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள்போராளி வீரவேங்கை சிலம்பரசன் (லோலோ - சின்னையா தயாபரன் கோப்பாய் தெற்கு, இருபாலை) வீரச்சாவு அடைந்தார்

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## போர் திட்டங்களில் குழப்பம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கில் தீவிரமடைந்து வரும் விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல்களும் இதன் விளைவாக சிங்கள ஆயுதப் படையினருக்கு ஏற்பட்டு வரும் பாரிய உயிரிழப்புகளும், கிழக்கில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவங்களும், அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும், அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. திடீரென அதிகரித்துள்ள இந்த வன்முறைச் சம்பவங்களும் உயிரிழப்புகளும் இராணுவத்தினரது போர் உபாயங்களையும் படையெடுப்பு திட்டங்களையும் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும் இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த இருவாரங்களில் வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் குறைந்தது 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதில் யாழ் மாவட்டத்தில் பத்துப்பேரும், மணலாற்றில் இருபது பேரும், கிழக்கில் முப்பது பேரும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல்களின் போது விடுதலைப் புலிகள் பல நவீன ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தனர்

இதேவேளை மண்டைதீவில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மூலம் கடற்படையினருக்குச் சொந்தமான நீரூந்து விசைப்படகு ஒன்றையும் கைப்பற்றியிருந்தனர்.

மேலும், திருமலை நகர்ப் பகுதியிலும், சாந்தமருதுச் சந்தைப் பகுதியிலும் இடம்பெற்ற குண்டுவெடிச் சம்பவங்களும் பாதுகாப்பு வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன

கிழக்கில் பூரண கட்டுப்பாடு என அரசாங்கம் பிரகடனப்படுத்திய பகுதிக்குள்ளும் வடக்கில் புலிகள் ஊடுருவ முடியாது என கூறப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா குடிகச்சக் காடியவில்

## ராணுவ வாகனம்மீதுதாக்குதல் ஐவர் பலி; ஐவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் குடிகச்ச கொடிய என்னுமிடத்தில் இரண்டு இராணுவ வாகனங்களில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒரு ஊர்காவல் படை உட்பட ஐவர் கொல்லப்பட்டதாகவும் ஐவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு வாகனத்தில் சென்ற 8 இராணுவத்தினரும், எட்டுப் பொலிசாரும் தப்பிவிட்டனர் என்றும் தாக்குதலுக்குள்ளான வாகனம் பின்னர் தீ மூட்டி எரிக்கப்பட்டதெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## நிவாரணம் பற்றி ஆராய உயர்மட்ட மாநாடு

வடக்கு,கிழக்கு அகதிகளின் நிவாரணம் மற்றும் மீளக்குடியேற்றம் பற்றி கொழும்பு கிராமோதய மண்டபத்தில் இம்மாதம் 28ஆம் திகதி உயர்மட்ட மாநாடு நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

...கள் ஆகியோரும் பிரட்மன் வீரக்கோனும் கலந்து கொள்வர் புனர்வாழ்வு புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரதன தலைமையில் மாநாடு நடைபெறும்.

வடக்கு கிழக்கில் உள்ள



நேற்று முன்தினம், தமிழீழ காவல் துறையின் பயிற்சியை முடித்துக்கொண்ட இரண்டாவது அணியினரின் அணிவகுப்பினை காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பார்வையிடுவதனை மேலுள்ள படத்தில் காணலாம்.

## 2 தமிழ்ப் பொது மக்கள் இராணுவத்தால் கைது

மட்டக்களப்பு மாவட்டம் இராணுவத்தினரால் இவர்கள்

11-09-1992 அன்று அளவெட்டிப் பகுதியில்சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள்போராளி வீரவேங்கை சிலம்பரசன் (லோலோ - சின்னையா தயாபரன் கோப்பாய் தெற்கு, இருபாலை) வீரச்சாவு அடைந்தார்

இவ் இரு போராளிளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தத் தெரிவித்துக் கொள்கின்றனர்

கடந்த இருவாரங்களில் வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் குறைந்தது 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதில் யாழ் மாவட்டத்தில் பத்துப்பேரும், மணலாற்றில் இருபது பேரும், கிழக்கில் முப்பது பேரும் கொல்லப்பட்டனர். இந்தாக்குதல்களின் போது விடுதலைப் புலிகள் பல நவீன ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தனர்

இதேவேளை மண்டைதீவில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மூலம் கடற்படையினருக்குச் சொந்தமான நீருந்து விசைப்படகு ஒன்றையும் கைப்பற்றியிருந்தனர்.

மேலும், திருமலை நகர்ப் பகுதியிலும், சாந்தமருதுச் சந்தைப் பகுதியிலும் இடம்பெற்ற குண்டுவெடிச் சம்பவங்களும் பாதுகாப்பு வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன

கிழக்கில் பூரண கட்டுப்பாடு என அரசாங்கம் பிரகடனப் படுத்திய பகுதிக்குள்ளும் வடக்கில் புலிகள் ஊடுருவ முடியாது என கூறப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் பற்றி ஆராய உயர்மட்ட மாநாடு

வடக்கு,கிழக்கு அகதிகளின் நிவாரணம் மற்றும் மீளக்குடியேற்றம் பற்றி கொழும்பு கிராமோதய மண்டபத்தில் இம்மாதம் 28ஆம் திகதி உயர்மட்ட மாநாடு நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள், வடக்கு கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள், புனர் வாழ்வுத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரும் பிரட்மன் வீரக்கோனும் கலந்து கொள்வர் புனர்வாழ்வு புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரதன தலைமையில் மாநாடு நடைபெறும்.

வடக்கு கிழக்கில் உள்ள அகதிகளின் நிவாரணம் மற்றும் மீளக்குடியேற்றம் தொடர்பாகவும் இம்மாநாட்டில்ஆராயப்படும் என தெரிய வருகிறது.

## பரீட்சை மீளாய்வு விண்ணப்பிக்கக் கோரிக்கை

1991 இல் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென நடாத்தப்பட்ட க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார்,

மீளாய்வு செய்யவிரும்பும் பரீட்சார்த்திகள் இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒரு பாடத்திற்கு 75 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்ட வேண்டும் விண்ணப்பங்கள் இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

மக்கள் வங்கி வாடிக்கையாளர்

## தற்போதைய முகவரியை தெரியப்படுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி, இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம் பெயர்ந்த வாடிக்கையாளர் தமது தற்போது தங்கியிருக்கும் முகவரியை தெரியப் படுத்தும் படி அறிவித்துள்ளது.

மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி, சங்கானைக் கிளைகளில் நடைமுறைக் கணக்குவைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தற்சமயம்இடம் பெயர்ந்து தங்கிஇருக்கும் முகவரியைத் தெரியப்படுத்தும்படியும் அல்லது தமது கணக்குகளிற்குரிய மாதாந்தக் கூற்றுக்களை அலுவலக நேரத்தில் நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வங்கி முகாமையாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்,

மகன் இறந்து 6வருடங்களாகியும்

## நட்ட ஈடு வழங்கவில்லை சிப்பாயின் தாய் முறையீடு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து பணியாற்றியபோது விபத்தில் சிக்கி உயிரிழந்த தமது மகனின் நட்ட ஈடுகொடுப்பனவுகள் ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரும் இதுவரை வழங்கப்படவில்லை என்று ஒரு தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

திருகோணமலை மரதன் கடவை பகுதியில் 12 செப்டம்பர் 1986-ம் திகதியன்று இராணுவ வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது தமது மகனும் இன்னும் நால்வரும் உயிரிழந்ததாக கூறியுள்ளார்.

பத்தொன்பது வயதான தமது மகன் இராணுவத்தில் லான்ஸ் கோப்ரல் அந்தஸ்தில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

வவுனியா குடிகச்சக் காடியவில்

## ராணுவ வாகனம்மீதுதாக்குதல் ஐவர் பலி; ஐவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் குடிகச்சக் கொடிய என்னுமிடத்தில் இரண்டு இராணுவ வாகனங்களில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒரு ஊர்காவல் படை உட்பட ஐவர் கொல்லப்பட்டதாகவும் ஐவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு வாகனத்தில் சென்ற 8 இராணுவத்தினரும், எட்டுப் பொலிசாரும் தப்பி விட்டனர் என்றும் தாக்குதலுக்குள்ளான வாகனம் பின்னர் தீ மூட்டி எரிக்கப்பட்டதெனவும் மேலும்தெரிவிக்கப் படுகிறது.

## ராணுவ சடலங்களை தேடிய 4 கடற்படையினர் பலி

(கொழும்பு)

கிளிவெட்டி குண்டுவெடிப்பில் காணாமல் போனவர்களை தேடிக் கொண்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில்நான்கு கடற் படையினர் கொல்லப் பட்டதாக கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

நேற்று முன்தினம் கிளிவெட்டி ஆற்றில் பயணம் செய்துகொண்டிருந்த பாதை மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியிருந்தமை தெரிந்ததே.

## கொழும்பில் தமிழர் அகதிமுகாம்களை மூடிவிட அரசு திட்டம்

### இராணுவ பிரதேசத்தில் குடியமர்த்த முடிவு

கொழும்பில் தமிழர்கள் தங்கியுள்ள அகதி முகாம்கள் யாவும் இம் மாதத்திற்குள் மூடப்பட்டுவிடும் எனத்தெரிய வருகிறது

இந்த முகாம்களில் தங்கியுள்ளோர் அனைவரையும் வடக்கு - கிழக்கில்உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அறியப் படுகிறது.

கொழும்பில் தமிழர்கள் தங்கும் நான்கு அகதி முகாம்கள் உள்ளன பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோயில், சரஸ்வதிமண்டபம், கொட்டாஞ்சேனை விவேகானந்தர்சபை மண்டபம்முகத்துவாரக் கோயில் ஆகிய இடங்களிலேயே இவை அமைந்துள்ளன.

ஜே.வி. பிக்கு ஆதரவான;

## 18 சிங்கள மாணவர் கடத்தப்பட்டது உண்மையே

### மனித உரிமைக்குழு அறிக்கை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பாடசாலையிலிருந்து 1989-ஆம் ஆண்டு இராணுவத்தினர் பதினெட்டுப் பாடசாலை மாணவர்களைக் கடத்திச் சென்றது உண்மையே என்று அரசினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை விசாரணைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

ஜே. வி பிக்கு ஆதரவாக மாணவர்கள் செயற்பட்டதால், பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் இராணுவத்தினர் இந்தப் பதினெட்டு மாணவர்களையும் கடத்திச் சென்றிருக்கலாம் என்று கூறப் படுகிறது. இப் பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரால படுகொலை செய்யப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]



நேற்று முன்தினம், தமிழீழ காவல் துறையின் பயிற்சியை முடித்துக்கொண்ட இரண்டாவது அணியினரின் அணிவகுப்பினை காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பார்வையிடுவதனை மேலுள்ள படத்தில் காணலாம்.

## 2 தமிழ்ப் பொது மக்கள் இராணுவத்தால் கைது

மட்டக்களப்பு மாவட்டம் 38 ஆம் கிராமத்தினை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு தமிழ்ப் பொது மக்களை கைதுசெய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

36 ஆம் கிராமம் புதுளைச் சந்தியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரால்இவர்கள் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

ஞானமுத்து கோபால பிள்ளை (வயது 30 - 38 ஆம் கிராமம்), கேசவப்போடி சீனித்தம்பி (வயது 25 திக்கோடை) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## வவு.ராணுவகாவலிலிருந்து தமிழ் இளைஞர் தப்பினார்

வவுனியாவிலுள்ள சிறிலங்கா இராணுவத் தலைமையகத்தில் தடுத்து வைத்திருந்த வட பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தப்பி ஓடிவிட்டதாக வவுனியா இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவரைக் கண்டு பிடிக்கும் பொருட்டு அம் முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றி வளைத்துத் தேடுதல் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இனப்போர் குறித்து மேற்றிராணியார் கவலை

(கொழும்பு)

முழு நாடுமே ஒரு பயங்கரமான நோயினால் பீடிக்கப் பட்டுள்ளது நாட்டில் நடைபெறும் இனப் போரினால் ஆயிரக்கணக்கில் மக்கள் உயிரிழந்தும், காயப்பட்டும் வீடுகளையும் இழந்துள்ளனர். ஊழலும் பயமும் நாட்டை விட்டு அகலவில்லை. உண்மையும், நீதியும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன செய்தித் தாள்களில் உண்மையைக் காண்பது கடினமாகவுள்ளது என்று அதி மேற்றிராணியார் அதி. வண. நீக்கிளஸ் மார்க்கஸ் பெர்னான்டோ தேவத்தையில் நோயாளர்களைக் குணப்படுத்தும் பலிபூசையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

லங்கா மாதா கோயிலில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

மங்களகரமான

திறப்பு விழா

சுபநேரம்:- புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி இன்று சனிக்கிழமை பகல் 12 மணி.

கயல்விழி நகைப் பூங்கா

224 / B, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்

(3159) து. புலேந்திரன்

## வரி விளம்பரம்


**WATCHES, CLOCKS AND RADIOS**

Watches, Clocks, Radios to repair? Contact us immediately. We repair with full guarantee - all watch batteries available. (We have no branches) Dilka Watch Works, 284 Stanley Road (Adjoining Vanavil Cool Bar). (சி/4970)


### தவறிவிட்டது

24-08-92 கிளாலி பாதையால் வரும் பொழுது நீல பிரயாண பை சாறிகளுடன் என்னால் மாறி எடுத்துவரப்பட்டுள்ளது அதேபோல் பிரயாண பை காற்சட்டைகளுடன் பாஸ் போட்டும் தவறிவிட்டது. மேலதிக விபரங்களுக்கு ஈழநாத காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். (3201)

### வல்லிபுர ஆழ்வார் வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த மாதம் 9ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 11ஆம் திகதி கடல் தீர்த்தத் திருவிழாவும், 12ஆம் திகதி கேணித்தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. இவ் ஆலய வருடாந்த மகோற்சவ ஒழுங்குகள் பற்றியஆலோசனைக் கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திரு.ச. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலய நிர்வாகிகள், உள்ளூராட்சி, மன்றங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் ஆலய மகோற்சவங்களை யொட்டி விஷேட மினிவான் சேவைகள் இடம்பெறும் எனவும் பிரதேசச் செயலர் திரு. முருகேசபிள்ளை தெரிவித்தார். (25)

### தாதியர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிபெற்று கடந்த யூன் மாதம் இடம்பெற்ற இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த 129 பேரில் 80 பேருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில்

---

அரசாங்க அறிவித்தல்

சுகாதார திணைக்களம் - யாழ்ப்பாணம்

## விலைக்கூறு கோருதல்

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான விலைக்கூறுகள் 21-09-1992 ஆம் திகதி பகல் 12.00மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக சுகாதாரசேவைகள் பிராந்தியப் பணிப்பாளரினால் கோரப்படுகிறது. வழங்கப்படும் பொருள்களுக்கு மட்டும் விலைக்கூறுகளைச் சமர்ப்பிக்கவும். வழங்கப்பட வேண்டிய பொருள்களின் மாதிரியை இப்பணிமனையில் பார்வையிடலாம்.

1. தாதிய உத்தியோகத்தருக்கான நீலவரைவுகள் உள்ளதுணி 36 அங். (Galatia Blue Material) — 769 மீற்றர்
2. பிரவுண் பொலியஸ்ரர் 36 அங். (Brown Polyester) — 64 மீற்றர்
3. கட்டிலுக்கு விரிக்கும் றபர் சீற் (Makintosh Rubber) — 1000 மீற்றர்
4. லாச்சிப்பூட்டு 808 (Bird Brand) — 12
5. இங்க் பாட் 4×2½ (Ink Pad - Hero) — 50
6. இங்க் பாட் 5½ × 3½ (Ink Pad -HERO) — 05

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கூறு தாரர் 21-10-92 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட பொருள்களை வழங்க வேண்டும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர்.

சு. சே. பி. ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
08 09.92.

(சி/5024)

---

## 5-ம் ஆண்டு நினைவலைகள்

இவன் :-
காங்கேசன்துறை உதித்த வேங்கை மறவன்
தேசத்தை மிகவும் நேசித்ததாலே
தேசவிரோதிகளால் நாசமானவன்
மாணவர் மனங்களில்
சுதந்திர விதையை விதைத்தவன்
விடுதலையை விரும்பியதால்
பாதி வீதியில்
வீழ்க்கப்பட்டான்



| தாயின் மகிழ்வுக்காய் | தாயக விடிவுக்காய் |
|---|---|
| 28 | 12 |
| 11 | 09 |
| 1965 | 1987 |

### வீரவேங்கை ராஜேந்தர்

( ஜெகதீசன் - பகீரதன்) காங்கேசன்துறை

மண்ணின் விடிவொன்றே கண்ணினை நிகர்த்ததென்று

---

## சிறையிலிருந்து குற்றவாளி ஹெலியில் தப்பினார்

பிரெஞ்சு சிறைச்சாலை ஒன்றில் இருந்த குற்றவாளியொருவர் உலங்கு வானூர்தி ஒன்றின் மூலம் தப்பிச்சென்றுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் ஏனைய கைதிகள் பாதிக்கப்படுவர் என்பதால் சிறைக்காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை.

தப்பிச் சென்ற குளோட் ரிவெய்ரா (36) என்ற கைதிக்கு 2029 ஆம் ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்து.

இவருடைய சகா ஒருவர் துப்பாக்கி முனையில் உலங்கு வானூர்தியை எடுத்துச் செல்லுமாறு விமானவோட்டியை அச்சுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### வீரவேங்கை ஆண்டான்

(குமாரசாமி விஜயமனோகரன்)

| வீரஜனனம் : | வீரச்சாவு : |
|---|---|
| 10-10-1971 | 12-03-1992 |

பூநகர் மண் அன்று
பூரிப் படைந்திட
புதியதோர் புலியாக
சென்றான் பயிற்சிக்கு
அந்நிய படைகள்
பண்ணிய பாவத்தை
எண்ணிய இளைஞன்
இணைத்தான் தன்னுடன்
சில இளைஞர்களை
தன் அண்ணனை தேடி
சென்றான் அணியுடன்
மின்னலைப் போலே
பெற்றான் பயிற்சியை
ஆண்டான் எனும் நாமம்
அவனுக்குக் கிடைத்தது
மீண்டான் பயிர்சிக்
களத்தினை விட்டு
வேண்டாம்
என்றான் வேறொன்றும்
போர்க்களத்திற்கு போகிறேன்
தான் என்றான்
நிதர்சனம் அவனை
நிறுத்தி வைத்தது
ஒருமனமாக நின்று
அங்கு உழைத்தான்
மின் கம்பத்தில்
காளை கடமையில்
நிற்க
காலன் அவனை
கவர்ந்து சென்றான்

---

## நினைவு கூருகின்றோம்..
## 1992 - 09 - 12

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை பன்குளம், துவரங்காடு, திருக்கடவூர்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 67 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கிளிநொச்சி மாவட்ட மாணவர் இயக்கப் பொறுப்பாளர்

**ராஜேந்தர்** [ஜெகதீசன் பகீரதன் - கல்லூரி வீதி, காங்கேசன்துறை - யாழ்.]

முல்லைத்தீவு- சிலாவத்தைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் இருவர்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை / குச்சவெளி, இரணைக்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ராமு** [மாரிமுத்து ராமசாமி - குச்சவெளி, திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**நேரு** [கணபதிப்பிள்ளை அழகரட்ணம் - திருக்கோணமலை]

1990 ஆம் ஆண்டு மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கலாபரன்** [மனோஜ்குமார் - சேனைத்தெரு, கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு]

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சேவியர்** [யூ. லைனஸ் - மன்னார்]

அம்பாறை - தம்பலவத்தைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**லெப். றொபின்** [ஐயங்கேணி, ஏறாவூர், மட்டக்களப்பு]

அம்பாறை - பொத்துவில், கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - ஒட்டமாவடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பெண்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 8 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பாலு** [சாமித்தம்பி திவ்வியராஜா - புதுக்குடியிருப்பு- மட்டக்களப்பு]

**மேஜர் விசு** [சாந்தன் அன்ரன் - மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரம், மன்னார்]

**2-ம் லெப். மாலினி** [வாசுகி சிவானந்தன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு]

**லியோ / சியோ** [நந்தினி தர்மலிங்கம்-மலையாளந் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்]

**ஏஞ்சல்** [செல்வி சுப்பிரமணியம் - பனங்கட்டிக் கொட்டு, மன்னார்]

**கப்டன் பகீர் / பகீரதன்** [பாக்கியநாதன் அன்ரனி நிமால் - போயிட்டி, இளவாலை]

**லெப். வசி** [அண்ணாமலை செல்வயோகன் - 3-ம்

துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திரு.ச. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலய நிர்வாகிகள், உள்ளூராட்சி, மன்றங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் ஆலய மகோற்சவங்களை யொட்டி விஷேட மினிவான் சேவைகள் இடம்பெறும் எனவும் பிரதேசச் செயலர் திரு. முருகேசபிள்ளை தெரிவித்தார். (25)

## தாதியர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிபெற்று கடந்த யூன் மாதம் இடம்பெற்ற இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த 129 பேரில் 80 பேருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிவதற்கான நியமனம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி 49 பேருக்கும் வடக்குக் கிழக்கு மாகாண சபை வைத்தியசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (42)

## பாரதி விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடத்தும் பாரதி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், நாளை காலை ஒன்பது மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்திலும் நடைபெறவுள்ளது. முதல் நாள் ஆய்வரங்கில் பாரதியின் பாஞ்சாலி சபதம் பற்றி கே. கே. சோமசுந்தரன், கோ. பத்மநாதன் ஆகியோரும், இரண்டாம் நாள் கருத்தரங்கில் எஸ் சிவலிங்கராசா க. சொக்கலிங்கம், பொன். பூலோகசிங்கம், இ. ஜெயராஜ் ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

## கட்டட தொழிலாளருக்கு நிவாரணம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வேலையற்று இன்னல்களை அனுபவித்து வரும் 782 மேசன் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு வகைகள் விநியோகிக்கப்படவுள்ளன. இவ் இலவச உலர் உணவு வகைகளை விநியோகிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளை மேற்கொண்டுள்ளார். இம் மேசன் தொழிலாளர்களின் குடும்பங்கள் நீண்டகாலமாக வருமானமின்றி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கது. [25[

---

பாதி வீதியில் வீழ்க்கப்பட்டான்



தாயின் மகிழ்வுக்காய்

28 | 11 | 1965

தாயக விடிவுக்காய்

12 | 09 | 1987

## வீரவேங்கை ராஜேந்தர்

### ( ஜெகதீசன் - பகீரதன்) காங்கேசன்துறை

மண்ணின் விடிவொன்றே கண்ணினை நிகர்த்ததென்று
எண்ணம் முழுவதுமே தமிழன்னை நிறைந்திருக்க
தமிழீழ மலர்வுக்காய் தளராத மனத்துடனே
தரணியிலே மறப்புலியாய் தமிழீழ தாகத்தோடு
மாணவச் செல்வங்களின் மனங்களைப் புரிந்துகொண்டு
மாணவ இயக்கமதன் வழிகாட்டியாய் நின்றவேளை.
வஞ்சனை மிக்க ஈனர்களால் உன்
உயரிய உயிர்தான் பறிக்கப்படினும்
நெஞ்சினில் உரம் மிக்க உன்
உணர்வுகள் எம்முடனே வாழ்கின்றன
உயிரினும் மேலாக நீ நேசித்த எம்
உரிமைப் போரை உணர்ந்தவராய்
உறுதியான உன் இலட்சியத்தை
இறுதிவரை நாம் தொடர்வோம்.

(3138) குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

28 - 06 - 19 4

வீரச்சாவு

12 - 09 - 1991

## வீரவேங்கை சியோ

### ( தர்மலிங்கம் நந்தினி )

தன்னைப் பாதுகாத்த தலைவனதும்; தன்னால் பாதுகாக்கப்பட்ட நாட்டுமக்களதும் கண்களில் இருந்தும் கண்ணீர் தாரை தாரையாகச் சொரியும் படியாக ஓர்வீர மரணம் ஏற்படுமானால் அத்தகைய வீரமரணத்தை இரந்தாவது பெறல் வேண்டும்:-

''புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்தும் கோள்தக்கதுடைத்து''

- என்ற பொய்யாமொழியை மெய்யாக்கி தியாக வேள்வியில் தியாகிப்போன எம்மலரே உனை எக்கணமும் மறவாது நினைவுகூருவோம்

''மலையாளந் தோட்டம்''
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (3161)

பெற்றோர்,
உடன்பிறப்புக்கள், உறவினர்
- நண்பர்கள்.

---

அந்நிய படைகள்
பண்ணிய பாவத்தை
எண்ணிய இளைஞன்
இணைத்தான் தன்னுடன்
சில இளைஞர்களை
தன் அண்ணனை தேடி
சென்றான் அணியுடன்
மின்னலைப் போலே
பெற்றான் பயிற்சியை
ஆண்டான் எனும் நாமம்
அவனுக்குக் கிடைத்தது
மீண்டான் பயிற்சிக்
களத்தினை விட்டு
வேண்டாம்
என்றான் வேறொன்றும்
போர்க்களத்திற்கு போகிறேன்
தான் என்றான்
நிதர்சனம் அவனை
நிறுத்தி வைத்தது
ஒருமனமாக நின்று
அங்கு உழைத்தான்
மின் கம்பத்தில்
காளை கடமையில்
நிற்க
காலன் அவனை
கவர்ந்து சென்றான்
காலம் பிறக்கும்
ஆண்டான் கனவு பலிக்கும்
நாம் ஆண்ட மண்
எம் கைக்குக் கிடைக்கும்

ஆலங்கேணி. பூநகரி,
மன்னார்.
(3164)

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், பிள்ளைகள், அக்கா,
அத்தான், தம்பிமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்

---

## முதலாண்டு நினைவு நாள்

12-9-92



வீர மண்ணில்

30 — 01 — 1974

வீர விண்ணில்

12 — 09 — 1991

## வீரவேங்கை மாறன்

### (துரைரெத்தினம் ராஜாரகுநாத்)

(வல்வெட்டித்துறை)

வீரத்தின் விளைநிலமாம் வல்வையில் பிறந்தாய், விவேகியாக வளர்ந்தாய், விரைவிலேயே களத்தில் வீர காவியம் பாடினாய், எம்மை விட்டுப் பிரிந்துவிட்டாய், உன் நினைவும் லட்சியமும் என்றும் எம்மை விட்டு நீங்காது

துரைரெத்தினம்
குடும்பத்தினர்

கைதடி
(3155)

---

தமிழ்ப் பொதுமகன் - ஒட்டமாவடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பெண்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 8 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பாலு** [சாமித்தம்பி திவ்வியராஜா - புதுக்குடியிருப்பு- மட்டக்களப்பு]

**மேஜர் விசு** [சாந்தன் அன்ரன் - மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரம், மன்னார்]

**2-ம் லெப். மாலினி** [வாசுகி சிவானந்தன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு]

**லியோ / சியோ** [நந்தினி தர்மலிங்கம்-மலையாளந் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்]

**ஏஞ்சல்** [செல்வி சுப்பிரமணியம் - பனங்கட்டிக் கொட்டு, மன்னார்]

**கப்டன் பகீர் / பகீரதன்** [பாக்கியநாதன் அன்ரனி நிமால் - போயிட்டி, இளவாலை]

**லெப். வசி** [அண்ணாமலை செல்வயோகன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு]

**2-ம் லெப். பிரபு / நெல்சன்** [க. தர்மலிங்கம் ராஜ்குமார் - குமிழமுனை, மணலாறு]

**ரகுநாத்** [ஆறுமுகம் பேரின்பராஜா - தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு]

**மதி** [மாரிமுத்து ஜீவகுமார் - வசந்தபுரம், கெருடமடு, ஒட்டிசுட்டான், முல்லைததீவு]

**லெப். சிங்கர்** [கந்தசாமி ஓவியராஜ் - சந்தை வீதி, கிரான், மட்டக்களப்பு]

**மாறன்** (துரைரெட்ணம் ராஜாரகுநாத்- 'சாந்தி நிலையம்', கைதடி)

**வினோத் / அமிர்தநாதன்** [குமார் பாலசுந்தரம்- தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு]

**2-ம் லெப். நிரஞ்சன்** (கனகசபை இராஜேந்திரன் இரணைப்பாளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

**சேனாதி** (அழகு ரவீந்திரன் - முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி)

மட்டக்களப்பு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**பிறேம்குமார்** (விநாயகமூர்த்தி ரவிசந்திரன் - விநாயகபுரம், திருக்கோவில், அம்பாறை)

**ஜெயகணேஷ்** (நமசிவாயம் ரஜனிகாந் - 6-ம் வட்டாரம், கல்முனை, அம்பாறை)

**மதன்** ((சோமசுந்தரம் - மகிளூர்முனை, களுவாஞ்சிக்குடி, மட்டக்களபபு)

**சுந்தரம்** (கந்தையா யோகராஜா - கோரக்கல்லிமடு மட்டக்களபபு)

**வில்லியம்** (கணபதிப்பிள்ளை செல்வராஜா - அம்பிலாந்துறை, மட்டககளப்பு)

**வாமன்** (கனகசபை தேவா - தபாற்கந்தோர் வீதி, காரைநகர், யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி, பெரியபோரதீவு முகாம்களிலிருந்து வெளியேறி திருப்பழுகாமம் பகுதியை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன், இளைஞன் உட்பட 4 தமிழர்கள்.

மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதியில் உள்ள இரு கிணறுகளிலிருந்து இதே தினததில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 24 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5036)

## சிந்தனைக்கு

நிதானமான ஐயப்பாடு என்பது விவேகிகளின் ஒளிவிளக்கு ஆகும்.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## எதிர்பார்த்ததுதான்

சிறிலங்கா ஜனாதிபதி மாளிகைக்கு பாதுகாப்பளித்துவந்த இராணுவத்தினர் அனைவரும் திடீரென இடைநிறுத்தப்பட்டு, அந்த இடத்திற்கு விசேட பயிற்சி பெற்ற பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் இராணுவ அதிகாரிகளின் மரணச்சடங்கின் போது கனத்தையில் விளைவிக்கப்பட்ட தாக்குதல் சம்பவங்களுக்கு சிவில் உடையில் நின்ற இராணுவத்தினரே காரணம் எனப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே இம்மாற்றம் இடம்பெற்றுள்ளதாக அறியவருகின்றது.

அதாவது, தனது இராணுவத்தினர் மீது பிரேமதாசா சந்தேகம் கொள்ளத் தொடங்கியுள்ளார் என்பதையே இது காட்டுவதாக உள்ளது ஆனால், இவ்விடயத்தில் திரு பிரேமதாசா மேற்கொண்ட நடவடிக்கை சரியானதாக இருப்பினும், இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகளும் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். சிலவேளை, இவை தவிர்க்க முடியாத ஒன்று என்றே கூறலாம்.

சிறிலங்கா இராணுவம் வீங்கிப் பெருத்து விட்டது அதன் எண்ணிக்கை 86 000 பேரைத்தாண்டிவிட்டது வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் கால் பங்கிற்கு மேல் அதன்செலவிற்கென ஒதுக்கப்படும் நிலை ஒன்று உருவாகியுள்ளது அத்தோடு, இராணுவத்தினரின் நடவடிக்கைகளுடன், அரசியல் நேரடித் தொடர்புடையதாகவும், பாதிப்பை ஏற்படுத்துபவையாகவும் மாறியுள்ளது. அதற்கும் மேலாக இராணுவத்தின் உதவியின்றி ஆட்சியில் நிலைக்க முடியாது என்ற நிலையும் உருவாகியுள்ளது.

இந்நிலையில் இராணுவம் தனது அதிருப்தியை இடைக்கிடை வெளிக்காட்டுவதும்இதன்உச்சக்கட்டமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் வரலாறு தந்த பாடங்கள். இந்நிலையில் பாராளுமன்ற ஆட்சி முறையும், மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பதும் கேள்விக்குரிய

# இலங்கைத் தமிழர் உட்பட நோர்வேயில் மூவர் கைது

### நோர்வேக்குள் நபரைக் கடத்த முயற்சி

(ஒஸ்லோ)

நான்கு தமிழ் இளைஞர்களை நோர்வே நாட்டிற்குள் கடத்திச் செல்ல முயற்சித்த பொன்னுத்துரை பாலகுமார் (வயது 31) என்பவரையும், அவரது இருஉதவியாளர்களையும் நோர்வே பொலிசார்கைது செய்தனர். வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் அதிகாரிகள் இருவருக்கு அனுப்பப்பட்ட சாமான் பொதிகளுடன் சேர்த்து நான்கு தமிழ் இளைஞர்களையும் கடத்தியபோதே பொ. பாலகுமார் கைது செய்யப்பட்டார்.

பொதிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதியான ஜெர்மன் பிரசை ஒருவரும், அமெரிக்கப் பிரசை ஒருவரும் பாலகுமாருக்கு உதவியதன் பேரில் அவருடன் கைது செய்யப்பட்டவர்களாவர். ஸ்ரெளாநோர்டியோ என்ற கப்பல் நோர்வேயின் கிழக்கில் அமைந்த மொஸ் என்ற துறைமுகத்தில் நங்கூரமிட்டபோது அதில் பிரயாணம் செய்த நான்கு தமிழ் இளைஞர்களையும் நோர்வேக்குள் கடத்திய போதே பாலகுமாரும் உதவியாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர், என்று பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆட்களை நோர்வேக்கு கடத்தும் தொழிலில் கடந்த சில மாதங்களில் பாலகுமார் 45,50,000 ரூபா வரை சம்பாதித்துள்ளதாக பொலிஸ் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது நோர்வேக்குள் கடத்திச் செல்வதற்கு இவர் தலா 66,500 ரூபா வசூலித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நோர்வேப் பிரசா உரிமை உடையவரான பாலகுமாருக்கும் அவரது உதவியாளருக்கும் முன்னோடி நடவடிக்கையாக இரண்டு வாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கிறது.

### 'கம்உதாவ' வில் கடமை புரிந்த

# பொலிசாரின் அலவன்ஸ் 50 வீதத்தால் வெட்டு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு நிதி நெருக்கடி காரணமாக பொலிசாருக்கான மேலதிக கொடுப்பனவு 50 வீதத்தால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கம்உதாவ நிகழ்ச்சிகளின் போது அங்கு கடமையாற்றும் பொலிசாருக்கு 1500 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால் அண்மையில் நடைபெற்ற கம்உதாவ நிகழ்ச்சிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாருக்கு 750 ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவு அரைவாசியாகக் குறைக்கப்பட்டமைக்கு நிதிப்பற்றாக்குறையே காரணம்என பொலிசாருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு படையினருக்கான இக் கொடுப்பனவும் குறைக்கப்படலாம் என பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பஹாமாஸ் கப்பலுடனான

# நஷ்ட ஈடு வழக்கு சமரசத்தில் முடிந்தது

(கொழும்பு)

பஹாமாசில் பதிவு செய்யப்பட்ட எண்ணெய்த் தாங்கிக் கப்பலான 'பல்மா' விடம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 40 இலட்சம் அமெரிக்க டொலர் நஷ்ட ஈடு கோரி தொடர்ந்த வழக்கில் இணக்கம் காணப்பட்டதை அடுத்து தடுத்துவைக்கப்பட்ட கப்பலை விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயசூரியா உத்தரவிட்டுள்ளார்.

15,000 மெட்றிக் தொன் காஸ் ஒயிலுக்கும் பத்தாயிரம் மெற்றிக் தொன் கசொலின் எண்ணெய்க்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் ஓடர் கொடுத்திருந்தார். கொழும்பு துறைமுகம் வந்த வேளையில் அவை ஒன்றுடனொன்று கலந்து விட்டன.

இதையடுத்து நஷ்ட ஈடு கோரி கப்பலை தடுத்துவைக்க நீதிமன்றத்தில் உத்தரவு பெறப்பட்டது.

கப்பல் உரிமையாளர்களுக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் எண்ணெயுடன் 7 இலட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர் தருவதாக இணக்கம் காணப்பட்டது. இதையடுத்தே கூட்டுத்தாபனம் தனது மனுவை விலக்கிக் கொண்டது.

# மூவரை விடுவிக்கக் கோரி

# செஞ்சிலுவைச் சங்க தேர்தல் நாளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கான புதிய நிர்வாகத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நாளை பதின்மூன்றாம் திகதி நடைபெற உள்ளது,

இத்தேர்தலை ஒட்டி தேர்தலில் போட்டி இடும் வேட்பாளர்கள் தீவிர பிரசார நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். தமக்கு ஆதரவு தேடும் முயற்சியாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் சென்று வாக்கு வேட்டையில் ஈடுபட்டிருக்கின்றனர். மேற்படி தேர்தலில் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு நேரடிப் போட்டியும் உபதலைவர் பதவிக்கு இருவருக்கிடையேயான போட்டியும் நிலவுகிறது.

அதேவேளை மேற்படி தேர்தலை நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகிறது.

# மீட்கப்படாத நகைகள் ஒரே இடத்தில் ஏலம்

மக்கள் வங்கியில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் அனைத்தும் ஒரே இடத்தில் ஏலத்தில் விற்பனை செய்ய மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடகு மீட்கப்படாத ஆகக் கூடிய பெறுமதி மிக்க நகைகளை ஏலவிற்பனைகளில் தாம் விரும்பிய படி விலை நிர்ணயித்து செயல்படும் திட்டமிட்ட கும்பலின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக மக்கள் வங்கி இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு முதலிகே மாவத்தையிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் வரும் 23ஆம் திகதியில் இருந்துஇந்தஏலவிற்பனை நாளாந்தம் நடைபெற உள்ளது.

இவ் ஏல விற்பனையில் தற்போதைய சந்தை விலை பெற முயற்சி மேற்கொள்ளப்படும் என மக்கள் வங்கித் தலைவர் எல். எச். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# பட்டதாரிகளுக்கு வேலை; ஏற்றுமதியாளர் சங்கம் உதவி

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்திற்கு தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் உதவியளித்து வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ் தனியார் துறை அலுவலகங்களில் பயிலுநர்களாக வேலையற்ற பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மேற்படி பயிற்சி முடிவடைந்ததும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய ஏற்றுமதியாளர் சங்கமும் தனியார் துறையினரும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக பத்திரிகையாளர் நடவடிக்கை குழு

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிராக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட கொழும்புப் பத்திரிகையாளர் நடவடிக்கைக்குழு ஒன்றைநிறுவியுள்ளனர் என்று சர்வதேசப் பத்திரிகை நிறுவனம் அறிவித்துள்ளது

சுமார் 500 பத்திரிகையாளர் கொழும்பில் கூடி ஏழு அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர் அத்துடன் பத்திரிகைச் சுதந்திரத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகளையும், வெகுஜன அமைப்புகளையும் கோரியுள்ளனர்.

...கும் செய்திகளை வெளியிடக் கூடாது என்றும் அரசு விதித்திருக்கும் அடக்குமுறைச் சட்டத்தை செய்தியாளர் தரப்பில் பேசிய ராஜகருணநாயக்கா கண்டித்துப் பேசினார்.

மேலும் வானொலி, ரூபவாஹினி மீதும் இரண்டு ஆங்கில தினசரிகள் வெளியிடும் ஒரு நிறுவனம் மீதும் அரசு வைத்திருக்கும் கட்டுப்பாட்டைக் கைவிடும் படியும் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டார்கள் என்ற

## ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

[பருத்தித்துறை]

இன்பருட்டி சனசமூகநிலைய கிராம அபிவிருத்திச்சங்க 37 ஆவதுஆண்டு விழாவும் காண்டீபன் கழக விளையாட்டுப் போட்டி நேற்றும் இன்றும் இன்பருட்டி காண்டீபன்

வத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகளும் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். சிலவேளை, இவை தவிர்க்க முடியாத ஒன்று என்றே கூறலாம்.

சிறிலங்கா இராணுவம் வீங்கிப் பெருத்து விட்டது அதன் எண்ணிக்கை 86 000 பேரைத்தாண்டிவிட்டது வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் கால் பங்கிற்கு மேல் அதன்செலவிற்கென ஒதுக்கப்படும் நிலை ஒன்று உருவாகியுள்ளது அத்தோடு, இராணுவத்தினரின் நடவடிக்கைகளுடன், அரசியல் நேரடித் தொடர்புடையதாகவும், பாதிப்பை ஏற்படுத்துபவையாகவும் மாறியுள்ளது. அதற்கும் மேலாக இராணுவத்தின் உதவியின்றி ஆட்சியில் நிலைக்க முடியாது என்ற நிலையும் உருவாகியுள்ளது.

இந்நிலையில் இராணுவம் தனது அதிருப்தியை இடைக்கிடை வெளிக்காட்டுவதும்இதன்உச்சக்கட்டமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் வரலாறு தந்த பாடங்கள். இந்நிலையில் பாராளுமன்ற ஆட்சி முறையும், மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பதும் கேள்விக்குரியதும், கேலிக்குரியதொன்றாகவும் மாறிவிடும்.

இவற்றிற்கு தென் ஆசியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் பலஉதாரணங்கள்உண்டு.மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பெனாசிர் பூட்டோவின் ஆட்சிக்கு இராணுவமும்,புலனாய்வுத்துறையினரும் முட்டுக்கட்டை போட்டன அரசியலில் இருந்த பெனாசிர் எதிர்ப்பு சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்த இராணுவமும்,புலனாய்வுத் துறையும் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு வழி செய்தன. அதாவது பல வருடங்களாக ஆட்சியில் செல்வாக்குச் செலுத்திய இராணுவம் அதனை இழக்க விரும்பவில்லை தற்பொழுது அதைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இதே போன்றே இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் தாய்லாந்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்த இராணுவத் தளபதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியினருடன் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைத்தார் அதன் மூலம் பிரதமராகவும் வந்தார். இதனைத்தவிர்த்து, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமரை ஆட்சியில் அமர்த்தத் தாய்லாந்து மக்கள் பலர் உயிர் துறக்க வேண்டி ஏற்பட்டது நூற்றுக்கணக்கில் இரத்தம் சிந்தவும், சிறையில் அடைபடவும் வேண்டியும் வந்தது.

பிலிப்பைன்சிலும் இதே நிலைபரமே தொடர்ந்து வருகின்றது. மக்கள் கிளர்ச்சி மூலம் மார்க்கோசின் ஆட்சி தூக்கி எறியப்பட்ட போதும் இராணுவம் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொணடே இருந்தது. அண்மையில் பதவி விலகிய ஜனாதிபதி அக்கினோ தனது ஐந்துவருட ஆட்சிக் காலத்தில் பல இராணுவ குறுக்கீடுகளைச் சந்திக்க வேண்டி வந்தது.

அதாவது, இராணுவத்தின் வளர்ச்சி மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளருக்கும், பாராளுமன்ற ஆட்சிமுறைக்கும் என்றும் சவாலாகவே இருந்துவந்துள்ளது. ஆனால், இதனைச் சிறிலங்காப் பேரினவாத ஆட்சியாளர்கள் கருத்திற் கொள்ளவில்லை. தமிழர் ஒழிக்கப்பட்டால்போதும் என்றே கருதினர். ஆனால், இன்று நிலைமை மாறி வருவதை உணரத்தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. ஆனால், இது ஒரு காலம் கடந்த சிந்தனையா என்பதே இன்றுள்ள கேள்வி.

## சமரசத்தில் முடிந்தது

(கொழும்பு)

பஹாமாசில் பதிவு செய்யப்பட்ட எண்ணெய்த் தாங்கிக் கப்பலான 'பல்மா' விடம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 40 இலட்சம் அமெரிக்க டொலர் நஷ்ட ஈடு கோரி தொடர்ந்த வழக்கில் இணக்கம் காணப்பட்டதை அடுத்து தடுத்துவைக்கப்பட்ட கப்பலை விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயசூரியா உத்தரவிட்டுள்ளார்.

15,000 மெட்றிக் தொன் காஸ் ஒயிலுக்கும் பத்தாயிரம் மெற்றிக் தொன் கசொலின் எண்ணெய்க்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் ஓடர் கொடுத்திருந்தார். கொழும்பு துறைமுகம் வந்த வேளையில் அவை ஒன்றுடனொன்று கலந்து விட்டன.

இதையடுத்து நஷ்ட ஈடு கோரி கப்பலை தடுத்துவைக்க நீதிமன்றத்தில் உத்தரவு பெறப்பட்டது.

கப்பல் உரிமையாளர்களுக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் எண்ணெய்யுடன் 7 இலட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர் தருவதாக இணக்கம் காணப்பட்டது. இதையடுத்தே கூட்டுத்தாபனம் தனது மனுவை விலக்கிக் கொண்டது.

## மூவரை விடுவிக்கக் கோரி ஆட்கொணர்வு மனு

காரணம் கூறப்படாமல் கைது செய்யப்பட்டு நீதிமன்றிலும் ஆஜர் செய்யப்படாமல் தடுப்புக்காவல் உத்தரவு அல்லது அவசரகால விதிகளின் கீழ் வழக்கும் தொடுக்கப்படாமல் பல மாதகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று மலையக வாலிபர்களை விடுதலை செய்யக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில்ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

அதேசமயம் மகசின் மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளில் 700 தமிழ்க் கைதிகள் உள்ளனர் கடந்த 3ஆம் திகதி வரை 149 பேர் சார்பில் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி அ விநாயகமூர்த்தி இவ்வாரம் மேலும் 25 பேர் சார்பில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

## வவுனியா எல்லையில் கொள்ளை அதிகரிப்பு

வவுனியாவின் எல்லைக் கிராமங்களில் கொள்ளைச் சம்பவங்கள் கடந்த பல நாட்களாக அதிகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சமளம் குளம், கட்டுவீரன் குளம்,முருகனூர், வேப்பங்குளம், எல்லப்பர் மருதங்களம் ஆகிய பகுதிகளிலேயே கொள்ளையர் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'குடுராஜா' மனைவி கொலை

## ஆறு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெரு போதைப் பொருள் வியாபாரி சிதம்பரம் தர்மராஜாவின் கைம்பெண்ணான சந்திரிகா சிறியாணியை (வயது 26) கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புலன்விசாரணை அதிகாரிகள் கடந்த புதன்கிழமை இரவு ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்தார்கள்.

இவர்களில் இருவர் ஆயுத பாணிகளாக இருந்தனர்.

சந்திரிகா சிறியாணி கடந்த திங்களன்று காலை கொழும்பு கோட்டை நீதி மன்ற வளவுக்குள் வைத்துக் கொலை செய்யப்பட்டார்,

குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பொறுப்பதிகாரியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொட்பிறி குணசேகராவின் பணிப்புரையின் பேரில் புலனாய்வுப் பொலிஸார் ஆறு சந்தேக நபர்களையும் கைது செய்தார்கள்,

கோடீஸ்வரரான தனது கணவன் சிதம்பரம் தர்மராஜாவை (வயது 35) கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சந்திரிகா சிறியாணி பொலிசாரால் கைது செய்யப்பட்டு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட வேளையில் கொலை செய்யப்பட்டார்

ளில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக பத்திரிகையாளர் நடவடிக்கை குழு

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிராக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட கொழும்புப் பத்திரிகையாளர் நடவடிக்கைக்குழு ஒன்றைநிறுவியுள்ளனர் என்று சர்வதேசப் பத்திரிகை நிறுவனம் அறிவித்துள்ளது

சுமார் 500 பத்திரிகையாளர் கொழும்பில் கூடி ஏழு அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர் அத்துடன் பத்திரிகைச் சுதந்திரத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகளையும், வெகுஜன அமைப்புகளையும் கோரியுள்ளனர்.

அமைச்சரவைச் செய்திகளை அமைச்சரவை உத்தியோக பூர்வமாக வெளியிடமுன் பத்திரிகைகள் வெளியிடக் கூடாதென்றும், நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் செய்திகளை வெளியிடக் கூடாது என்றும் அரசு விதித்திருக்கும் அடக்குமுறைச் சட்டத்தை செய்தியாளர் தரப்பில் பேசிய ராஜகருணநாயக்கா கண்டித்துப் பேசினார்.

மேலும் வானொலி, ரூபவாஹினி மீதும் இரண்டு ஆங்கிலத் தினசரிகள் வெளியிடும் ஒரு நிறுவனம் மீதும் அரசு வைத்திருக்கும் கட்டுப்பாட்டைக் கைவிடும் படியும் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மூன்று மாதங்களில் இரண்டு பத்திரிகை ஆசிரியர்களுக்கு எதிராக அரசு வழக்குத் தொடர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

[பருத்தித்துறை]

இன்பருட்டி சனசமூகநிலைய கிராம அபிவிருத்திச்சங்க 37 ஆவதுஆண்டு விழாவும் காண்டீபன் கழக விளையாட்டுப் போட்டி நேற்றும் இன்றும் இன்பருட்டி காண்டீபன் விளையாட்டு அரங்கில் நிலையத் தலைவர் திரு. செ.பாலசிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது இவ்விழாவை யாழ் மாவட்ட கடற்புலிகள் உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. புவியரசன் தமிழீழதேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். [25]

### அப்பியாசக்கொப்பி அன்பளிப்பு

பண்டத்தரிப்பு கோட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அரிமாகழகத்தினர்அப்பியாசக் கொப்பிகளைவழங்கியுள்ளனர் பண்டத்தரிப்புக்கல்விக் கோட்டபிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் இவர்கள் இதற்கென ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை கையளித்துள்ளனர்.(42)

### 1993ஆம் ஆண்டு பாடசாலை தவணைகள்

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள ஒரு சுற்று நிருபத்தின் படி 1993-ம் ஆண்டுப் பாடசாலைத் தவணைகள் வருமாறு.

சிங்கள, தமிழ்ப் பாடசாலைகள்—முதலாம் தவணை: ஜனவரி 4, 1993 — ஏப்பிரல் 7, 1993. இரண்டாம் தவணை: மே 3 1993 — ஜூலை 30, 1993. மூன்றாம் தவணை: செப்ரெம்பர் 1, 1993 — டிசம்பர் 3, 1993.

### கும்பாபிஷேகம்

பருத்தித்துறை அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலய (சிவன் கோவில்) திரிதளநூதனஇராச கோபுர பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி (14- 9- 92) நடைபெறவுள்ளது.

கிரிய பத்திமணி சிவஸ்ரீ தா' வாசுதேவக்குருக்கள் தலைமையிலே நடைபெறவுள்ளது. (25)

யற்ற பட்டதாரிகள் சேர்த்துக்

எடுத்துள்ளனர்.

## மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் கலந்துரையாட அழைப்பு

தமிழீழ விடுதலைப் போரில் தம் உயிரைத் தற்கொடையாக்கிக் கொண்ட மாவீரர்கள் நினைவாக நடாத்தப்படும் அனைத்து நிகழ்வுகள் சம்பந்தமாகவும் தம்முடன் கலந்தாலோசித்து நடாத்துமாறு தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன். தியாகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில்மேலும் மாவீரர்களின் நினைவாக நடாத்தப்படும் விழாக்கள்,போட்டிகள், வைபவங்கள் எவையானாலும் தமிழீழம் உள்ளடங்கலாக நடாத்துவதற்கு விரும்பும்கழகங்கள், சங்கங்கள், பொதுஸ்தாபனங்கள், பாடசாலைகள், ஏனைய துறைசார்ந்த நிறுவனங்கள் எவையாயினும் மாவீரர் பணிமனையின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்று அவர்களின் அனுசரணைகளுடன் நடாத்துவது மாவீரர்களுடைய வரலாற்றுக்கு உறுதுணையாக அமையும் என்பதாலே இவ்வேண்டுகோளை விடுப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசர்நாய்க்கடி

## தடுப்பூசி மருந்துக்கு பலத்த தட்டுப்பாடு

விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி.) மற்றும் ஏற்பூசி மருந்து போன்றவற்றிற்கு யாழ் வைத்தியசாலையில் மிகவும் தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த மாதம் இம் மருந்து போதியளவு வந்து சேராததினாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

தினமும் நூறுக்கும் அதிகமான நோயாளர்கள் தடுப்பூசி ஏற்றுவதற்காக யாழ் வைத்தியசாலைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்.

## வீரவில தடுப்பு முகாமில் 87 இளைஞர் உண்ணாவிரதம்

வீரவில தடுப்புமுகாமில் எவ்வித விசாரணையும் இன்றி நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனை ஆட்சேபித்து 87 தென்னிலங்கை வாலிபர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாக வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதம் செவ்வாய் காலை வரை கைவிடப்படவில்லையெனத் தெரிகிறது.

ஈழநாதம்

# ஜே. வி. பி. யின் பாதுகாப்பில் டி. ஐ. ஜி. பி. உடுகம்பொல

[கொழும்பு]

சிறிலங்காவில் நடைபெற்ற அனைத்து அநாகரிக படுகொலைகளுக்கும் சிறந்த சாட்சியாக விளங்கும் உடுகம்பொலவை கொலை செய்ய ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என ஜே. வி. பி. இயக்க மகளிர் முன்னணித் தலைவி சேபாலி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் உள்ள தமது முகாம் ஒன்றில் வைத்து ராவய என்ற சிங்களப் பத்திரிகையின் நிருபருக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் வழங்கிய இப்பேட்டியில் எமது மகளிர் முன்னணியே உடுகம்பொலவை இதுவரை காலமும் பாதுகாத்து வந்தது. எமக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்துப் படுகொலைகளுக்கும் முக்கிய சாட்சியாக உடுகம்பொல இருந்ததினாலேயே எமது மகளிர் முன்னணி அவருக்கு போதிய பாதுகாப்பை வழங்கியது. அது எமது கடமையாகவும் இருந்தது. இதேவேளை நடந்த அனைத்து அநாகரிக படுகொலைகளையும் மக்களுக்கு விளக்குவதற்கு இவரே சிறந்த ஆதாரமாகவும் உள்ளார். இவரை அரசு கொலை செய்யும் பட்சத்தில் எமக்கு இருக்கும் சாட்சி அழிந்துவிடும் மக்களுக்கு அரசின் செயலை தெரிவிக்க வேறுவழி இல்லாமல் போய்விடும்.

எமது மகளிர் அணி ஆரம்பத்தில் தற்பாதுகாப்புக்காக ஆயுதத்தை ஏந்தியது 1983 ஆம் ஆண்டு மேமாதம் முதலாம் திகதியே முதல் தடவையாக இராணுவ சீருடையில் மக்கள்முன் தோன்றியது 1987 இல் காயமடைந்தவர்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டது.

எம்மிடம் ஆயுதம் இருப்பதால் அரச குண்டர் படைகளிடமிருந்து பல தடவைகள் பல சந்தர்ப்பங்களில் பலரை நாம் காப்பாற்றியுள்ளோம் தற்போது எமது ஜே.வி பி இயக்கம் அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகிறது. கொழும்பு, கண்டி மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர் மத்தியில் அரசியலை பரப்பி வருகிறோம். விரைவில் ஜே.வி பி. யின் மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்க திட்டமிட்டுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### பெற்றுக்கொள்ளவும்

(வடமராட்சி)

பருத்தித்துறை தும்பளை வீதியில் ஒரு கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இக்கைக்கடிகாரத்தை தவறவிட்டவர்கள் பருத்தித்துறை சரவணாஸ் வீதி, வேலும் மயிலும் என்பவரிடம் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது. (82)

### எரிமலைக்கான சாத்தியமில்லை


தியத்தலாவையில் எவ்வித எரிமலைக் குமுறலும் இல்லையென அடிப்படைக் கல்வி நிலைய விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

விஞ்ஞானிகள் குழு தியத்தலாவையில் முழுமையான பரிசோதனைகளை மேற்கொண்டது.

எரிமலைக் குமுறல் எதுவும் அங்கு நிச்சயமாக இல்லையென அடிப்படைக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் திசாநாயக்கா தெரிவித்தார்

### இணுவிலில் மகாஜனா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கடந்த ஒன்பதாம் திகதி புதன்கிழமை தொடக்கம் இணுவில் சைவ மகாஜனக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது என்று கல்லூரி அதிபரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது அங்கு மேலும் பிற்பகல் 1 15க்கு ஆரம்பமாகும் மேற்படி பாடசாலைக்கு கல்லூரியின் சகல மாணவர்களையும் சமுகம் தரும்படியும் கேட்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் தமிழீழ காவல்துறையின் பயிற்சியை முடித்துக் கொண்ட இரண்டாவது அணியினரின் அணிவகுப்பு மரியாதையினை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றுக் கொள்வதனை படத்தில் காணலாம்.

## பல்வேறு தடைகளையும் மீறி மிடுக்குடன் வெளிவரும் மலர்

முத்தமிழ் விழா மலர் பற்றி இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

தலைவருட்பட இயக்கவீரர்களின் வாழ்த்துச் செய்திகளுடனும் 20க்கு மேற்பட்ட ஆக்கங்களுடனும் இடர்மிகுந்த இந்தக்காலததில் பல்வேறு தடைகளையும் மீறி மிடுக்குடன் வெளிவருகிறது முத்தமிழ் விழா மலர்

இவ்வாறு நேற்று மாலை முத்தமிழ் விழா மலரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் வெ இளங்குமரன் குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கடந்த ஆண்டு நடைபெற்ற முத்தமிழ் விழாவின் அறிவிப்பை ஒடி இவ் ஆண்டும் வட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் முத்தமிழ் விழாவைச் சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு மலர் படைக்கப்பட்ட நிலையிலும் இடர் மிகுந்த தற்கால போர்ச் சூழலில் முத்தமிழ் விழாவை நடத்துவதில்லை என்று இயக்கம் முடிவெடுத்தது ஆயினும் விழாவுக்காகப் படைக்கப்பட்ட மலரை வாடவிடாமல் தமிழீழ மக்களின் கைகளில் தவழவிடுகின்ற வகையிலேதான் இந்த முத்தமிழ் விழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது எனவும் தெரிவித்தார்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் துணைப் பொறுப்பாளரும், முத்தமிழ் விழாப் பொறுப்பாளருமான திரு. தேவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் டொமினிக், ஜனனி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர் அதைத் தொடர்ந்து மௌன அஞ்சலியும், இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றது யாழ்மாவட்ட கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் சிட்டுவின் வரவேற்புரையைத் தொடர்ந்து 'எழுதாதகைஉலக்கை' என்ற தலைப்பிலான கருத்தரங்கும் இடம்பெற்றது பண்டிதர் வீ. பரந்தாமன் தலைமையிலான இக்கருத்தரங்கில் செம்பியன் செல்வன், சி. சிவலிங்கராஜா, சபா. ஜெயராசா ஆகியோரும், நூலின் ஆய்வுரையை க. சொக்கலிங்கம், வி. பி சிவநாதன் ஆகியோரும் நிகழ்த்தினர் ''தாயை நிகர்த்த தாயகத்தைக் காதல் செய்'' என்ற தலைப்பிலான கவி ரங்கிற்கு புதுவை இரத்தினதுரை தலைமை தாங்கி நடத்தினார் அதைத் தொட...

## ராஜீவ்காந்திக்கு பல எதிரிகள் இருந்தனர்

காங்கிரஸ் குழு தெரிவிப்பு

(சென்னை)

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி சிங், தி.மு.க தலைவர் கருணாநிதி. புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோர் ராஜீவ் காந்தியைப் பொது எதிரிகளாகக் கருதினார்கள் என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தி மு.க உதவி வழங்கி வந்ததென்றும் தமிழ் நாடு காங்கிரஸ் குழு குற்றம் சாட்டியுள்ளது

தி.மு.க ஆட்சியின் போது மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு என்ன தகவல் கிடைத்தாலும் அவை, உடனுக்குடன் யாழ்ப்பாணத்திலும், சென்னையிலுமுள்ள புலிகள் தலைமைச் செயலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

## தி. மு. க வின் ஏஜெண்டாக மூப்பனார் செயல்படுகிறார்

-இந்திரகுமாரி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏஜென்டாக மூப்பனார் பணியாற்றி வருகிறார் என்றும், கருணாநிதியின் தூண்டுதலால் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக அவர் வசைபாடி வருகிறார் என்று தமிழக சட்ட நலத்துறை அமைச்சர் இந்திரகுமாரி கூறியிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி. இப்போதைய பிரதமர் நரசிம்மராவ் ஆகியோரை ஆதரித்து வருகின்ற ஜெயலலிதாவை மூப்பனார் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் தாக்கிப் பேசிவருவது முறையான செயல் அலல என்றும் அவர் கூறினார்

இருபத்தைந்து ஆண்டுகளாகக் காங்கிரஸின் தன்மானத்தைப்பற்றியே கவலைப்படாத மூப்பனார் இப்போது தன்மானத்தைப் பற்றி கவலைப்படதொடங்கியுள்ளார் என்றும் காங்கிரசுக்கு எந்த விதத் தியாகமும் செய்யாத மூப்பனாருக்கு தன்மானத்தைப் பற்றிப் பேச எந்த வித அருகதையும் இல்லை என்றும் இந்திர...

### தீவிரமடையும்

பகுதிகளுள்ளும் நடைபெற்ற தாக்குதல்கள் அரச, இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, இத்தாக்குதல் அதிகரிப்பினால் இராணுவத்தினரின் வடக்கு - கிழக்கு ...



## பிறந்த தின வாழ்த்து



### செல்வன் பிரதீபன்

திருக்கோணமலை உப்புவெளி 786-ம் இலக்கம் 3-ம் கட்டை ரவி மோட்டடஸ் உரிமையாளர் ரவிந்திரன் சாந்தி





நெஞ்சில் நிறைந்தவனின்

## 61-ம் நாள் நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 21 — 06 — 1964 |  | 14 — 07 — 1992 |



## செல்வன் பிரதீபன்

திருக்கோணமலை உப்புவெளி 786-ம் இலக்கம் 3-ம் கட்டை ரவி மோட்டஸ் உரிமையாளர் ரவிந்திரன் சாந்தி தம்பதிகளின் அருமைப் புதல்வன் செல்வன் பிரதீபன் தனது 4 ஆவது பிறந்த தினத்தை இன்று 12-09-92- இல் நீர்வேலி சேச் ஒழுங்கை யோகமகால் இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, திருக்கோணமலை அப்பம்மா அப்பப்பா குடும்பத்தினர், பெரியத்தை குடும்பத்தினர், சுவிஸ் சந்திரன் மாமா குடும்பத்தினர் மற்றும் சுதுமலை அம்மம்மா குடும்பத்தினர், பெரிய மாமா குடும்பத்தினர், அப்பப்பா குடும்பத்தினர், கல்வியங்காடு அப்பப்பா குடும்பத்தினர், நீர்வேலி மாமா மாமி குடும்பத்தினர், மற்றும் சித்திமார், அத்தைமார், மாமாமார் யாவரும் நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றனர்

(3151)

---

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

## பாரதி விழா

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்:- 13-09-1992 ஞாயிறு காலை 9 மணி
தலைவர்:- கலாகேசரி ஆ தம்பித்துரை

### நிகழ்ச்சிகள்

அ) தொடக்கவுரை
திரு. பொ. பாலசிங்கம்
(விசேட ஆணையாளர் - யாழ் மாநகரசபை)
ஆ) சிறப்புரை
திரு. எஸ். வேலாயுதம்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர் - யாழ்.கோட்டம்)
இ) கருத்தரங்கு
பாரதி பாடல்களில் விடுதலை
தலைவர்:- கலைப்பேரரசு ஏ. ரி பொன்னுத்துரை
சமுதாய விடுதலை
திரு. எஸ் சிவலிங்கராஜா எம். ஏ.
இலக்கிய விடுதலை
திரு. க சொக்கலிங்கம் எம். ஏ
அரசியல் விடுதலை
திரு. பொன். பூலோகசிங்கம் எல். எல். பீ.
ஆன்மீக விடுதலை
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
ஈ) கலையரங்கு
வசந்தன் கூத்து
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(3152)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

நெஞ்சில் நிறைந்தவனின்

## 61-ம் நாள் நினைவஞ்சலி

வீரப்பிறப்பு
21 — 06 — 1964



வீரச்சாவு
14 — 07 — 1992

### மேஜர் பாலா

கிருஷ்ணன் - தனபாலசிங்கம்
(சாள்ஸ் அன்ரனி
சிறப்பு படைப்பிரிவைச் சேர்ந்தவர்)

மறத்தமிழன் நானென களத்தில் குதித்துமே
பல விழுப்புண்கள் ஏற்றுநின்றாய் - நின்
கரத்தினின் ஆயுதத்தால் கலங்கவைத்த எதிரிகளை
களத்தினில் வீழ்த்தி வந்தாய்

சரிததிரம் படைத்துமே சாவையும் வென்று
ஒரு சரித்திரம் ஆகிவிட்டாய் - தமிழ்
தாயகத்தின் நெஞ்சினிலே காவியத்தின் நாயகனாய்
காலமெல்லாம் வாழுகின்றாய்

12-09-92 இன்று எம் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில்கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகளையும்அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்
- குடும்பத்தினர்.

(சி/5040)

---

## 1-ம் நினைவு அஞ்சலி



பிறப்பு:
28-9-1975

இறப்பு:
12-9-1991

### வீரவேங்கை ஏஞ்சல்

(சுப்பிரமணியம் செல்லி)

ஆழ்ந்து துயரக் கடலில்
எமது கண்ணீர்
அஞ்சலி

62, ஈச்சமொட்டை,
யாழ்ப்பாணம்.

வளர்ப்புத் தாய்
திருமதி ந. சிவசோதி
(5039)

---

## மூப்பனார் செயல்படுகிறார்

(சென்னை)

-இந்திரகுமாரி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏஜெண்டாக மூப்பனார் பணியாற்றி வருகிறார் என்றும், கருணாநிதியின் தூண்டுதலால் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராகஅவர் வசைபாடி வருகிறார் என்று தமிழக சட்ட நலத்துறை அமைச்சர் இந்திரகுமாரி கூறியிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி. இப்போதைய பிரதமர் நரசிம்மராவ் ஆகியோரை ஆதரித்து வருகின்ற ஜெயலலிதாவை மூப்பனார் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் தாக்கிப் பேசிவருவது முறையான செயல் அலல என்றும் அவர் கூறினார்

இருபத்தைந்து ஆண்டுகளாக காங்கிரஸ்சின் தன்மானத்தைப்பற்றியே கவலைப்படாத மூப்பனார் இப்போது தன்மானத்தைப் பற்றி கவலைப் படதொடங்கியுள்ளார் என்றும் காங்கிரசுக்கு எந்த விதத் தியாகமும் செய்யாத மூப்பனாருக்கு தன்மானத்தைப் பற்றிப் பேச எந்த வித அருகதையும் இல்லை என்றும் இந்திரகுமாரி கூறினார்.

---

### தீவிரமடையும்

பகுதிகளுள்ளும் நடைபெற்ற தாக்குதல்கள் அரச, இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, இத்தாக்குதல் அதிகரிப்பினால் இராணுவத்தினரின் வடக்கு - கிழக்கு தாக்குதல் திட்டங்கள் குழம்பிப்போயுள்ளதாகவும், புதிய திட்டங்கள் வகுக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் தெரியவருகின்றன.

---

### 18 சிங்களவர்

டிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

35 பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டதைக் ஏற்கனவே கொழும்பு வழக்கறிஞர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது

இச் சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்தும்படி அரசு மனித உரிமைக்குழு அரசைக் கேட்டுள்ளது.

---

### இனப்போர்

உரையாற்றிய அவர், கடவுளுக்கும் பணப்பேய்க்கும் ஒரே சமயத்தில் சேவையாற்ற முடியாது என்று இயேசு கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. இரண்டில் ஒன்றுக்கு நாம் சேவையாற்ற வேண்டும் என்றார்.

பிரச்சினைகளுக் கெல்லாம் மூல காரணம் அதிகாரமும், பண ஆசையுமாகும். இறைவனின் இராச்சியத்துக்கும், அவரின் நீதிக்கும் சேவை செய்யும் வகையில் இறைவன் காட்டிய வழியில் நாம் நடந்தால் சமாதானத்தை எட்டலாம் என்றும் அவர் தமது உரையில் கூறினார்.

---

### நட்ட

பதவி வகித்து வந்ததாகவும் கடந்த ஐந்தரை ஆண்டுகளாக இறந்த தமது மகனின் மாதாந்த சம்பளத்தைப் பெற்று வருகின்றபோதும் நட்ட ஈட்டுத் தொகை பற்றி இதுவரை தமக்கு எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை என்றும் அத் தாயார் கூறியுள்ளார்.

---

பித்து வைத்தனர் அதைத் தொடர்ந்து மௌன அஞ்சலியும், இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றது யாழ்மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் சிட்டுவின் வரவேற்புரையைத் தொடர்ந்து 'எழுதாதகைஉலக்கை' என்ற தலைப்பிலான கருத்தரங்கும் இடம் பெற்றது பண்டிதர் வீ. பரந்தாமன் தலைமையிலான இக்கருத்தரங்கில் செம்பியன் செல்வன், சி. சிவலிங்கராஜா, சபா. ஜெயராசா ஆகியோரும், நூலின் ஆய்வுரையை க. சொக்கலிங்கம், வி. பி சிவநாதன் ஆகியோரும் நிகழ்த்தினர் ''தாயை நிகர்த்த தாயகத்தைக் காதல் செய்'' என்ற தலைப்பிலான கவிரங்கிற்கு புதுவை இரத்தினதுரை தலைமை தாங்கி நடத்தினார் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

## மண்ணெய்யின் விலை 40 ரூபாவாக நிர்ணயம்

இன்றைய யுத்தகால சூழ்நிலையில் பலவிதமான நெருக்கடிகள், காரணங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டு மண்ணெய் வியாபாரம் செய்யும் சகல வர்த்தகர்களும் ஆகக்கூடிய சில்லறை விலையாக ஒரு லீற்றர் மண்ணெய் ரூபா 40/-ற்கு விற்கலாம் என தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

## 1000 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின்வட பகுதியில் கடும் பருவப் பெயர்ச்சிமழை பெய்வதாகத் தெரியவருகிறது

இதனைத் தொடர்ந்து இரண்டு தினங்களுள் மட்டும் 1000பேர் உயிரிழந்துள்ளனர்

மழையைத் தொடர்ந்து வெள்ளமும, ஆறுகள் பெருக்கெடுத்து அபாய மட்டத்திற்கு மேல் பாய்கின்றன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மண் சரிவுகளினாலேயே அநேகமானோர் மரணமடைந்துள்ளனர்

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5593

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
27-8754, 24-691, 26-3068, 27-6205, 24-5964, 42-4126, 27-6799, 28-8051 26-6075, 26-3659 42-9220, 24 5774, 24-0521, 26-4568, 27-9052 24-5119 24-8419, 40-7584, 26-3722, 28-5294, 24-8558, 41-9997, 27-1187, 26-2941, 43-.019, 28-8589, 27-2089, 27-3927.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
27 6583, 26-4393, 26-9797, 24-1172, 41-1799, 24 5454, 24-4957, 28-3528, 27-5197, 28-9697 26-1735, 27-1494, 27-5058, 28 3029, 27-9661, 26-2745, 28-2145, 26 8878, 24-8603, 24-207.

வடபகுதிக்கு உள்ளே விட்ட உழவு இயந்திரம்
25-3925, 36-2937.